பக்கங்கள் 18+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

யாழில் இருந்து வவுனியாவுக்கு

## நாளை காலை வாகனப் பேரணி

(எஸ்.நிதர்ஷன்)

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரி நாளை காலை யாழ்ப்பாணத்தில் 02

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 பங்குனி 02 வெள்ளிக்கிழமை 15.03.2024 அதிர்வு 228




"வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து! வழிபாட்டு உரிமையைத் தடுக்காதே!!"

"பொய் வழக்குப் போடாதே! கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய்!!"

# நெடுங்கேணி பொலிஸ் நிலையம் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகை



(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு - வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்கக் கோரியும், பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்தும் நெடுங்கேணியில் இன்று ஆர்ப்பாட்டம் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

நெடுங்கேணி நகர சந்தியில் ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி, 04






# நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இனவெறி, மதவெறி, பாலியல் சார்ந்த நோயாளியா?

## கஜேந்திரன் எம்.பி. கேள்வி

**(கே.வசந்தன்)**

நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இனவெறி, மதவெறி, பாலியல் சார்ந்த மனநோய்க்கு உட்பட்டவரா என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுவிக்க வலியுறுத்தியும், பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்தும் நெடுங்கேணியில் இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”கைது செய்யப்பட்டவர்களின் ஒருவரின் வேட்டியை உருவி அரை நிர்வாணமாகக் கொண்டு வந்திருந்தார்கள். நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வக்கிர புத்தி கொண்டவர். ஏனெனில் ஆண் ஒருவரை அரை நிர்வாணமாகக் கொண்டு வருகின்றபோது பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸார் உள்ளார்கள். பொதுமக்கள், பெண்கள் வெளியில் நிற்கின்றார்கள். அப்படி இருக்கையில் அவர்களுக்கு முன்னே அரை நிர்வாணமாகக் கொண்டு செல்ல நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனுமதிக்கின்றார் என்றால் அவரிடம் ஒரு மனநோய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இனவெறி, மதவெறி, பாலியல் சார்ந்த மனநோய்க்கு உட்பட்டவரா என்ற கேள்வி எழுகின்றது. மிருகக் குணம் கொண்ட ஒருவரால் கைது செய்யப்பட்ட 8 பேரும் மறுநாள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தான் குற்றச்சாட்டுக்களைத் தேடிப் பிடித்தார்கள்.

தொல்பொருள் சின்னம் எவற்றுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. பொய்யான அடிப்படையில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் அறிக்கை பெற்று அவர்களைது பிணையை நிறுத்தியுள்ளார்கள். வெடுக்குநாறிமலையை சைவர்களிடம் இருந்து பறித்து எடுப்பதற்கான முயற்சியே நடைபெறுகின்றது.

தொல்பொருள் அமைச்சரும் இதன் சூத்திரதாரியாக இருந்து செயற்படுகின்றார். அவர் இனவெறிச் செயற்பாட்டைக் கடந்த காலங்களில் மேற்கொண்டவர். குருந்தூர்மலையில் அகழ்வு செய்யப் போகின்றோம் எனப் பொய் சொல்லி அங்கு பௌத்த விகாரையை நிறுவியவர். அதற்கு முழு சூத்திரதாரி விதுர விக்கிரமநாயக்க என்ற தொல்பொருள் அமைச்சர். அதே அமைச்சர்தான் தற்போது இங்கே வன்முறைகளுக்குக் காரணமாக இருக்கின்றார். தமிழ் – சிங்கள கலவரத்தை ஏற்படுத்த முயல்கின்றார். இந்த இனவெறிக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நான்காவது நாளாகக் கைது செய்யப்பட்ட 8 பேரில் 5 பேர் உண்ணா விரதம் இருக்கின்றார்கள். அவர்களது உடல் நிலை பாதிப்படைகின்றது. வவுனியாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி இனவெறி பிடித்தவராக இருக்கின்றார். மனித உரிமை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை கைதிகளைப் பார்வையிடவில்லை. குடும்பத்தினரைச் சந்திக்கவில்லை. அவர்களும் இந்த ஒடுக்குமுறைக்குத் துணை போகின்றார்கள். வவுனியா மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி பதவி விலக வேண்டும். அதன் கொழும்பு அலுவலகம் போரினவாத நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

நாளை தினம் காலை 10 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயத்தின் முன் நடைபெறும் போராட்டத்திலும் அனைவரும் கலந்துகொண்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்க வேண்டும்.” – என்றார்.

---

### நாளை காலை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அனைவருக்காகவும் இன்று 8 அப்பாவி உறவுகள் வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்கக் கோரி அவர்களின் உறவுகள் நாளை காலை 10 மணியளவில் வவுனியாவில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். இந்நிலையில், அவர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக நாளை காலை 07.30 மணிக்கு யாழ். நல்லூர் ஆலய முன்றலில் இருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்கள் ஒரு குற்றமும் செய்யாதவர்கள். இவர்கள் செய்த பெரிய குற்றம் வெடுக்குநாறிமலைக்குப் போனதுதான். அங்கு “ஓம் நமச்சிவாய“ எனக் கூறி பூஜை செய்வதற்காகவே அவர்கள் அங்கு சென்றார்களே தவிர வேறெதற்காகவும் இல்லை.

இதனால், அவர்கள் தொல்லியல் சட்டத்தை மீறியதாக அவர்களைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் சம்பவத்தை நாம் கண்டுகொள்ளவில்லை என்றால், நாளை வடக்கு – கிழக்கு எங்கும் தொல்லியல் சட்டம் எனக் கூறி அனைத்து பிரதேசங்களையும் ஆக்கிரமிக்கக்கூடும். ஆகவே, அனைவரையும் இந்த வாகனப் பேரணியில் கலந்துகொள்ள வருமாறு பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்.” – என்றார்.

# பெரியநீலாவணை இரட்டைக்கொலை: நடந்தது என்ன?

- பாறுக் ஷிஹான் -



தனது இரண்டு பிள்ளைகளையும் கொன்று பின்னர் தற்கொலை செய்து கொண்ட தந்தை ஒருவரின் செயல் தொடர்பில் பத்திரிகைகளிலும் இணையங்களிலும் தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் முதன்மைச் செய்திகளாக வலம் வந்து கொண்டு இருக்கின்றன.

தனது இரு வலது குறைந்த பிள்ளைகளையும் பராமரித்து வந்த மனைவி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் புற்றுநோய் காரணமாக மரணமடைந்த நிலையில் மனைவியின் இழப்பு தன்னை வெகுவாகப் பாதித்திருந்தது எனவும், இதனால் தனது பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு சிரமமாக இருந்த காரணத்தால் தான் இவ்வாறு செயற்பட்டார் எனவும் தனது வாக்கு மூலத்தில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் மருதமுனை அல்பாக்கியாதுஸ் ஸாலிஹாத் ஜும்மா வீதியை சேர்ந்த 63 வயது மதிக்கத்தக்க முஹம்மது மிர்சா முகமது கலீல் தெரிவித்திருக்கின்றார்.

அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணை முஸ்லீம் பிரிவு மருதமுனை அல்பாக்கியாதுஸ் ஸாலிஹாத் ஜும்மா வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுக் காலை 8 மணியளவில் குறித்த இரட்டைக்கொலை இடம்பெற்றுள்ள நிலையில் தகவல்கள் வெளியாகி அதிகளவான மக்கள் அவ்விடத்தில் ஒன்று கூடி இருந்தனர்.

## அங்கு நடந்தது என்ன?

குறித்த வீட்டில் மனைவியின் இழப்பின் பின்னர் தனது இரு இரு வலது குறைந்த பிள்ளைகளையும் பராமரித்து வந்த தந்தையான 63 வயது மதிக்கத்தக்க முஹம்மது மிர்சா முகமது கலீல் என்பவருக்கு வாழ்க்கையில் விரக்தி வந்திருக்கும் நிலை அவரது அண்மைக் கால செயற்பாட்டில் உணர முடிகின்றது. அதாவது தனது மனைவியின் நோய் கால கட்டத்தில் அவரைப் பராமரிக்க மற்றும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு ஒரு சிற்றூர்தியை கொள்வனவு செய்திருந்தார்.

இந்தச் சிற்றூர்தியை சம்பவ தினத்திற்கு முன்னர் மற்றுமொரு தரப்பினருக்கு விற்பனை செய்திருந்ததாகவும் மறுமணம் செய்வதற்கு ஆர்வமாக அவர் இருந்த போதிலும் தனது இரு மனநலன் குன்றிய பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி தடைப்பட்டதாகவும் அமைதியான மென்மையான போக்குள்ள அமைதியான ஒரு மனிதன் என அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனைவிட தந்தையினால் கொல்லப்பட்ட இரு பிள்ளைகளும் அப்பகுதியில் உள்ள வலது குறைந்த பிள்ளைகளை அனுமதிக்கும் ஹியூமன் லிங்க் பாடசாலைக்கு கல்வி கற்பதற்கு அனுமதித்திருந்தார். இருந்தபோதிலும் அவரது மனைவியின் இறப்பின் பின்னர் அப்பிள்ளைகளை அப்பாடசாலைக்கு அனுப்புவதை இடைநிறுத்திக் கொண்டார் என்ற மற்றுமொரு தகவலும் வெளியாகி இருந்தது.

மேலும் 6 பேர் இக்குடும்பத்தில் படுகொலை செய்யப்பட்ட இரு வலது குறைந்த பிள்ளைகளைத் தவிர வெளிநாடுகளில் தொழில் புரிந்த ஏனைய இரு பிள்ளைகளும் அண்மையில் மரணமடைந்த தாயின் மரணச் சடங்கில் வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்து கலந்துகொண்ட கதையும் விசாரணையில் வெளியாகி இருந்தது.

இவ்வாறான நிலையில் 29 வயது மதிக்கத்தக்க முஹம்மது கலீல் முகம்மது நிகாஸ் தினமும் அருகில் உள்ள மருதமுனை அல்பாக்கியாதுஸ் ஸாலிஹாத் ஜு/ம்மா மஸ்ஜிதில் தனது ஐவேளை தொழுகையையும் விடாமல் செய்து இறைபணியை முன்னெடுத்தவர் என்பதுடன் வலது குறைந்த இயக்கத்தைக் கூட மறந்து வழமையாக ஏனைய மக்களோடு இணைந்து செயற்படுபவர் எனவும் மக்கள் ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.

## இரட்டைக்கொலை எவ்வாறு நடைபெற்றது?

குறித்த வீட்டில் இருந்த இரு பிள்ளைகளும் படுக்கையில் வைத்தபடி பல வகை கத்தி வகைகளைக் கொண்டு திடீரென கழுத்தால் வெட்டிய தந்தை சம்பவத்தைக் கைத்தொலைபேசி ஊடாக தனது சகோதர – சகோதரிகளுக்கு அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் சம்பவ வீட்டிற்கு உடனடியாக வந்த சகோதர – சகோதரிகள் அங்கு கண்ட காட்சியைக் கண்டு அபயக்குரல் எழுப்பியதுடன் இரத்தக்காயங்களுடன் கத்தியோடு காணப்பட்ட தனது சகோதரனை அருகில் உள்ள கல்முனை ஆதார வைத்தியசாலைக்குப் பொது மக்களின் உதவியுடன் அழைத்துச் சென்றனர்.

பின்னர் சம்பவ இடத்தில் இரத்த வெள்ளத்துடன் காணப்பட்ட முஹம்மது கலீல் முகம்மது நிகாஸ்(வயது-29), முஹம்மது கலீல் பாத்திமா பஸ்மியா (வயது-15) ஆகியோரின் நிலை கண்டு அவ்விடத்தில் வந்திருந்த உறவினர்கள் மக்கள் தங்களை அறியாமல் இந்த நோன்பு (ரமழான்) மாதத்தில் இவ்வாறு நடந்து விட்டதே என கதறி அழுது பெரிய நீலாவணை பொலிஸாருக்கு அறிவித்தனர்.

## பொலிஸாரின் நடவடிக்கை

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ். கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சடலங்கள் காணப்பட்ட வீட்டுக்கு உரிய பாதுகாப்பை வழங்கினர். தடயவியல் பொலிஸாரும் மோப்ப நாய் பிரிவினரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

பின்னர் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் அங்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டு இறுதியாக பிரேத பரிசோதனைக்காக அம்பாறை பொது வைத்தியசாலை அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் இரவு உறவினர்களிடம் இரு சடலங்களும் கையளிக்கப்பட்டன.

சடலங்கள் இன்று நல்லடக்கம் செய்யப்படவுள்ள நிலையில், வெளிநாட்டில் இருந்து இரு சகோதரர்களின் வருகைக்காக காத்திருப்பதாக உறவினர்கள் நேற்றிரவு தெரிவித்தனர்.



# நெடுங்கேணி பொலிஸ் நிலையம் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுங்கேணி – புளியங்குளம் வீதி ஊடாக சென்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் வாயில் வரை சென்று அங்கு போராட்டம் இடம்பெற்றதுடன், உதவிப் பிரதேச செயலாளரிடம் கண்டன மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து பேரணியாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் வனவளத் திணைகள அலுவலக வாயிலில் நின்று வனவளத் திணைக்களத்துக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியதுடன், பின்னர் அங்கிருந்து சென்று நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது பொலிஸ் உயர் அதிகாரிகள் வருகை தந்து ஆர்ப்பாட்டக்காரருடன் பேச முற்பட்ட போதும், அதற்கு மறுப்புத் தெரிவித்து பொலிஸாருக்கு எதிரான கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். இதன்போது அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்ப டையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸ் நிலையம் முன்பாக சுமார் அரை மணிநேரம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மக்கள் பின்னர் அங்கிருந்து சென்று பஸ் நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், “பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய், வழிபாட்டு உரிமையைத் தடுக்காதே, சிவ வழிபாட்டைத் தடை செய்யாதே, வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம், பொய் வழக்குப் போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், இ.சாள்ஸ் நிர்மலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், கிறிஸ்தவ மதகுருமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான செந்தில்நாதன் மயூரன், ஜி.ரி. லிங்கநாதன், ம.தியாகராஜா, து.ரவிகரன், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# வெடுக்குநாறிமலையின் வழிபாட்டு உரிமையை சைவத்தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுங்கள்!

## ஜனாதிபதி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறார் அங்கஜன் எம்.பி.

(த.சுபேசன்)

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள வெடுக்கு நாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாட்டு உரிமையை சைவத்தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,



பரம்பரை பரம்பரையாக வெடுக்கு நாறிமலையில் அமைந்துள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தை சைவத் தமிழ் மக்கள் வழிபட்டு வந்த நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் ஆகியன மக்களுடைய வழிபாட்டு உரிமையை கேள்விக்கு உட்படுத்தியிருந்தன.

பரம்பரை பரம்பரையாக ஆதிலிங் கேஸ்வரரை வழிபட்ட மக்கள் அன்றிலிருந்து இன்று வரை பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கடந்த வருடம் கூட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகம் இனந்தெரியாதோரால் உடைத்தெறியப்பட்டது.

இந்த விடயம் நாடாளுமன்றம்வரை பேசுபொருளாக மாறியிருந்தது.

அப்போது ஜனாதிபதி வெடுக்கு நாறிமலை விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு வழங்குவார் என்று உறுதிய ளித்திருந்தார்.

இருப்பினும் அதன் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்பாக ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி பூஜை நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பொலிஸாரால் அநாகரீகமாக நடத்தப்பட்டிருந்தனர்.

எந்தவித குற்றமும் செய்யாத பக்தர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனூடாக வெடுக்குநாறிமலையில் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்த மக்களுடைய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு உரிமையை தடுக்கின்ற உரிமை பொலிஸாருக்கு இல்லை.

எனவே இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தபடி நிரந்தர தீர்வொன்றை வழங்க வேண்டும். அதனூடாக அந்த மக்களுடைய மத நம்பிக்கை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.-என்றுள்ளது.

# மருதமுனையில் நாணல் சங்கை வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் "அவளுடைய பலம் நாட்டுக்கு முன்னேற்றம்" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வின் மலர் வெளியீடும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும், மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் மர்ஹூம் கலாபூசணம் பி.எம்.எம்.ஏ.காதர் நினைவரங்கில் அமைப்பின் தலைவி பாத்திமா சூபா தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான இலக்கிய வித்தகர் விருது பெற்ற நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினரும் எழுத்தாளருமான ஆசிரியர் மசூறா சுஹூறுத்தீன், இலக்கிய வட்டத்தின் ஊடக ஆலோசகராக இருந்து 2022 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஊடகத்துறைக்கான இளம் கலைஞர் விருது பெற்றுக்கொண்ட ஊடகவியலாளர் ஏ.எல். எம்.ஷினாஸ், மருதமுனையின் முதலாவது பெண் கவிஞரான திருமதி மாஜிதா தவ்பீக் ஆகியோர் விசேட விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நாணல் கலை, இலக்கிய வட்டம் வருடா வருடம் நடத்தி வரும் மகளிர் தின நிகழ்வின் போது சிறந்த சாதனைத் தாய்மார்களை பாராட்டி கௌரவிப்பது வழமை. அந்த வரிசையில் இந்த முறை சிறந்த சாதனை தாயாக இருவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

நாணல் சஞ்சிகையின் முதல் பிரதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவிடம் கையளிக்கப்பட்டு வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, ஸ்ரீலங்கா சென்ஜூடி பரா மெடிக்கல் கல்லூரி பணிப்பாளர் எம்.எம். சப்றாஸ் மன்சூர், இன்ஸிரியூட் ஒப் கிளைமேட் சேன்ச் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.பி.ஸியாரத்துல் பெறோஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நிலைமையைக் குழப்பாதீர்கள்!

சரியோ, பிழையோ எப்படியும் இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவை நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து அரசியல் கட்சிகளினதும் தலைவர்களும் கூட அப்படித்தான் எதிர்பார்க்கிறார்கள்.

இந்தத் தேர்தலின் மூலம் ஆட்சி மாற்றம் - அதிகாரம் மாற்றம் என்பன ஏற்படக்கூடிய சாத்தியங்களும் அதிகம் உண்டு.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு தள்ளாடும் நாட்டின் நிலைமை, ஆட்சி மாற்றத்தையொட்டி என்னவாகும் என்பது குறித்து பலரும் சிந்திக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இப்போதைய ரணிலின் அரசு வகுத்துள்ள திட்டங்கள், வியூகங்கள், கொள்கைகள், நிலைப்பாடுகள் என்பவற்றை இவ்வருடம் நடக்கப் போகின்ற தேர்தல்களை அடுத்து அதிகாரத்துக்கு வரும் தரப்புகள் எப்படிக் கையாள போகின்றன, நடைமுறையில் உள்ள நிலைமையை அவை தொடருமா அல்லது தலைகீழாக மாற்றி அமைக்கும் திட்டங்களை முன்னெடுக்குமா என்பவை எல்லாம் இப்போதே எதிர்வு கூறிவிட முடியாத விடயங்களாக உள்ளன. தேர்தல்களின் பின்னர்தான் அவற்றை நாம் காணலாம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையைப் பிணையெடுக்க முன்வந்துள்ள சர்வதேச நாணய நிதியம் கூட வரப் போகின்ற ஆட்சி மாற்றத்தின் விளைவுகள் பற்றிய ஊகிப்புகள், எதிர்பார்ப்புகள், விளைவுகள் பற்றிய கருத்துக்களுடன்தான் இந்த உதவி வழங்கலுக்கு முன் வந்திருக்கும் என்பது திண்ணம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளைக் கொழும்பில் சந்தித்துள்ள ஜே.வி.பியின் மூத்த தலைவர்கள், சில விடயங்களை நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு தெரிவித்திருக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

நடக்கப் போகின்ற தேர்தல்களை ஒட்டி இடம்பெறப் போகின்ற ஆட்சி மாற்றத்தில் ஜே.வி.பியினரின் கை ஓங்குமா, இல்லையா என்பதை இப்போதே எதிர்வு கூறுவது கஷ்டம். ஆனால் உத்தேச ஆட்சி மாற்ற விவகாரத்தை ஒட்டி, சர்வதேச நாணய நிதியத் தரப்பினருக்கும் சேர்த்து ஜே.வி.பி. தரப்பு சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் கவனிக்கத் தக்கவை.

ஒன்று - தற்போது ஆட்சியில் இருக்கும் ரணிலின் அரசு மக்களின் ஆணையைப் பெற்றதல்ல. அதனுடன் செய்யப்படும் உடன்பாடுகள், இணக்கங்கள் மக்கள் ஆணை பெற்றவை அல்ல. ஆகவே அவற்றின் விளைவுகள் குறித்து சர்வதேச நாணய நிதியம் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது.

அடுத்தது - ஜே.வி.பி. ஆட்சிக்கு வருமானால், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளெழுச்சி பெறுவது தொடர்பாக இப்போதைய அரசு சார்பில் செய்யப்பட்ட - அளிக்கப்பட்ட - வாக்குறுதிகள் மீளாய்வு செய்யப்படும். தேசிய சொத்துக்கள் மீட்கப்படும்.

- இதே போன்ற கருத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் கூட தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றது.

ஆக, இந்த வருட தேர்தல்களில் ஆட்சி மாற்றம், அதிகாரம் மாற்றம் ஏற்பட்டால் இலங்கையின் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளத் தூக்கி நிறுத்துவதற்கு உதவ முன்வந்த சர்வதேச நாணய நிதியமும் கூட பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி நேரும் என்பது கண்கூடு.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் தற்போது ஆட்சியில் இருக்கும் தரப்பும், அந்த ஆட்சிக்கு வருவதற்குக் கண் வைத்திருக்கும் தரப்புக்களும் ஒரு விடயத்தை ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு இன்னும் மீளவில்லை. பல தசாப்தங்களாக வாங்கிக் குவித்த வெளிநாட்டுக் கடன்களின் மீள் செலுத்துகையை நாடு இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. கடன் மீளளிக்க வக்கற்ற - வகையற்ற - நாடு என்ற பெயரில் இருந்து இலங்கை இன்னும் மீளவில்லை. சர்வதேச நாணய நிதியம் நேரடியாக தலையிட்டு பிணை எடுக்க முன் வந்திருக்கின்றமையால், கடன் வழங்கிய நாடுகள் பழைய கடன் நிலுவையை அறவிடுவதற்கு இன்னும் கழுத்தை நெரிக்கவில்லை. கொஞ்சம் விட்டுப் பிடிக்க இணங்கி இருக்கின்றன. அதே சர்வதேச நாணய நிதியத்தின் மீது நம்பிக்கை வைத்து புதிய உதவிகளை கூட அவை வழங்குகின்றன.

அத்தகைய உதவி வாய்ப்பை - உறுதிப்பாட்டை - போட்டடித்துக் குழப்பாமல் இருப்பது இனி அதிகாரத்துக்கு வரக்கூடிய தரப்புகளின் பொறுப்பும் கடமையும் ஆகும். அதை அவை மறந்து விடக்கூடாது.



# பாவனையற்று உள்ள அரச விடுதியை பார்வையிட்ட மட்டக்களப்பு அரச அதிபர்!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கல்லடியில் பாவனையற்றுக் காணப்படும் அரச விடுதிக்கு திடீர் கள விஜயம் ஒன்யை மேற்கொண்டுள்ளார்.

மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய கடந்த காலங்களில் உபயோகத்தில் இருந்து தற்போது பாவனையற்று இருக்கும் அரச விடுதியைப் பார்வையிட்டுள்ளார்.

பாழடைந்து பற்றைக் காடாகக் காணப்படும் அரச விடுதியைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் துப்பரவு செய்ய மாவட்ட அரச அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த விடுதியின் மூலம் அரசுக்கு வருவாய் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் இதன் போது வழங்கியுள்ளார்.

இந்த விடுதியை விரைவில் புனர்நிர்மாணம் மேற்கொண்டு பாவனைக்கு உகந்ததாக மாற்றுவதற்கான நடவடிக்கையை அரசாங்க அதிபர் எடுப்பார் என்று இதன்போது தெரிவித்துள்ளார்.



# பாடசாலைக்கு புதிய நுழைவாயில்

**(அப்துல்சலாம் யாசீம்)**


அனுராதபுரம் மாவட்டம் கெப்பித்திக் கொள்ளாவ கல்வி வலயத்துக்கு உட்பட்ட நிக்கவெவ முஸ்லிம் வித்தியாலயத்தின் புதிய நுழைவாயில் உத்தியோபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

“எமது பாடசாலையின் பௌதீக வளங்களை மேம்படுத்தல்” என்ற கருப்பொருளின் அடிப்படையில் அந்நஜாஹ் அகடமியின் ஒருங்கிணைப்பில் கிராம மக்களின் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நுழைவாயில் பாடசாலை அதிபர் ஏ.ஜே.எம்.தௌபீக் தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கெப்பித்திக் கொள்ளாவ வலய கல்வி பணிப்பாளர் ருவன் மைத்திரிபால மற்றும் வலயக்கல்வி பணிமனையின் தமிழ் பிரிவு பணிப்பாளர் எஸ்.முகம்மட், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஏ.எம்.உவைஸ், அந்நஜாஹ் அக்டமியின் தலைவர் எஸ்.எம்.சதாத் உட்பட பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# “இந்து சமுத்திர கடற்பரப்பைப் பாதுகாத்தல்” ஓவியப் போட்டியில் ஸாஹிரா மாணவன் வெற்றி






**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியம் 27 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுத் தேசிய ரீதியில் ஒழுங்கு செய்திருந்த ஓவியப் போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரியில் 9 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் முஹம்மட் இர்பான் அஹ்னப் வெற்றி பெற்று அதற்கான சான்றிதழையும் பணப் பரிசையும் பெற்றுக் கொண்டார்.

வெற்றி பெற்ற மாணவர் குழு சுற்றுலா சென்றனர். அங்கு 45 நிமிட படகுச் சவாரி, முப்படை வீரர்களின் பரசூட் கண்காட்சி, பொலிஸ் குதிரைப்படை பிரிவின் குதிரைப்படைக் கண்காட்சி, கடல்வாழ் உயிரினங்களின் வடிவத்திலான அழகான பட்டங்கள் வானில் பறக்க விடப்படும் நிகழ்வு போன்றவற்றில் பங்கேற்றனர்.





# மலையகத்தில் தடம் பதித்துள்ள விஜயாலயன் அறக்கட்டளை!

‘விஜயாலயன் அறக்கட்டளை’ மலையகத்தில் தடம் பதித்துள்ளது.

பொகவந்தலாவையில் அமைந்துள்ள ஹோலி றோசரி மகா வித்தியாலயத்தில், வித்தியாலய அதிபர் கோ. குணசீலன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அறக்கட்டளையின் இயக்குநர்களான இரா.மதியழகன், திருமதி ம.விஜயராணி, முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும் சென். மேரிஸ் கல்லூரியின் முன்னாள் அதிபருமான ந. பாலசுந்தரம், சேவைக்கால முன்னாள் ஆலோசகர்களான சி. கணபதிப்பிள்ளை, செ. கலைச்செல்வன் ஆகியோரும், ஷனன் மகாவித்தியாலய உப அதிபர் திருமதி பி. பிரமிளா, ஏனைய ஆசிரியர், மாணவர், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கும், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் வித்தியாலயத்துக்குத் தேவையான 25 வெண் பலகைகளுக்கு உரிய காசோலை அதிபரிடம் வழங்கப்பட்டது.



# மட்டக்களப்பில் “மனநலம்” நூல் வெளியீடு!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலையத்தின் ஏற்பாட்டில் சுப்பிரமணியம் லோகநாதன் எழுதிய “மனநலம்” நூல் வெளியீடு அண்மையில் மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலைய ஸ்தாபகர் அருட்பணி போல் சற்குணநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் பாரதி புளோரன்ஸ் கெனடி மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு தொழில்சார் உள நல உதவி நிலையப் பணிப்பாளர் அருட்பணி ஜீவராஜ் நூலின் முதன்மைப் பிரதியை வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வின் சிறப்புரையை “உளநலம் ஒரு சமூகப் பார்வை” எனும் தலைப்பில் மகுடம் வி.மைக்கல் கொலினும், நூல் நயப்புரையை மட்டக்களப்பு கல்வி வலய முறைசாரா உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.தயானந்தாவும், நூல் ஆய்வுரையை ஜே.ஐ.எஸ்.ஏ. பணிப்பாளர் அருட்பணி எஸ்.பெனியும், ஏற்புரையை மட்டக்களப்பு கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசகர் அ.ஜெயநாதனும் ஆற்றினர்.














# சிவானந்தாவை வீழ்த்தி சம்பியனானது பாடுமீன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாண ரீதியில் யாழ். லீக் அனுசரணையில் அரியாலை சனசமூக நிலைய முன்னாள் தலைவர் அமரர். எஸ்.கே. சண்முகலிங்கம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அணிக்கு 7 பேர் கொண்ட இப் போட்டியில் கீரிமலை சிவானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட பாடும்மீன் அணி, 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கியது.

அந்த அணி சார்பாக கீதன், றெக்ஸமன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல் போட்டனர்.



# மின்னொளியில் சிவராத்திரி தின கரப்பந்தாட்டம்



காரைதீவு விளையாட்டு கழகம் வருடாந்தம் நடாத்திவரும் மின்னொளியில் சிவராத்திரி தின கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கழகத் தலைவர் வி.விஜய சாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் இரவு கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போது...

படங்கள் வி.ரி. சகாதேவராஜா



# சாய்ந்தமருது அரச சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்துக்கு புதிய நிர்வாகிகள்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நிதியத்தின் தலைவர் அல் ஹாஜ் ஐ. அப்துல் குத்தூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலக கணக்காளர் திருமதி என்.வி.எம். லரீப், சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட ஓய்வூதிய நிதியத்தின் செயலாளர் அல் ஹாஜ் ஏ. உதுமாலெப்பை, சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். நம்ஸான், ஏ.சி. முகம்மட், அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ. சாஜிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது நிதியத்தில் இருந்து இறந்த அங்கத்தினருக்காக துஆ பிராத்தனை இடம்பெற்றது. பின்னர் நிகழ்வின் தலைவர் முன்னெடுக்கப்படவேண்டிய பல்வேறு திட்டங்கள் தொடர்பில் தனது முன்மொழிவை முன்வைத்தார்.



நிகழ்வில் நிதியத்தில் 15 வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வு பெற்ற எம்.ஐ.ஏ. ஜப்பார் கௌரவிக்கப்பட்டார்.

இறுதியாக இடம்பெற்ற நிர்வாகிகள் தெரிவின்போது தலைவராக எம்.எம்.எம். இஸ்மாயில், செயலாளராக ஏ.எல். மீராலெப்பை, பொருளாளராக ஐ.எல். ஹம்ஸா, உப தலைவராக யூ.எல்.ஏ. அஸீஸ், உப செயலாளராக இசட். ஏ. லத்தீப், நிர்வாக உத்தியோகத்தர்களாக ஏ.எம். றசீட் மற்றும் எம்.சி. ஜமால்டீன், கணக்கு பரிசோதகராக இசட்.ஏ. முனீர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தில் அங்கம் வகிப்பதிலுள்ள நன்மைகள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டு நிதியத்தில் இதுவரை இணைந்து கொள்ளாதவர்களை புதிய நிர்வாகம் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

# சிவனொளிபாத மலை பருவகாலத்தில் 3 மாதங்களில் 3 தொன் உக்காத கழிவு

(மஸ்கெலியா)

சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பிக்கப்பட்டு 03 மாதங்களில் 03 தொன் உக்காத திண்மக் கழிவுகள் மஸ்கெலியா பிரதேச சபையால் அகற்றப்பட்டுள்ளன.

சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பமாகிக் கடந்த மூன்று மாத காலப் பகுதியில் நல்லதண்ணி – சிவனொளி பாத மலை வீதியில் யாத்திரிகர்களால் வெளியேற்றப்பட்ட சுமார் 03 தொன் மக்காத திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன என்று உள்ளூராட்சி மன்ற செயலாளர் சிவராம் ராஜவீரன் தெரிவித்தார்.

மஸ்கெலியா பிரதேச சபையின் சுற்றாடல் திணைக்களத்தால் நல்லதண்ணி நகரம், நல்லதண்ணி, சிவனொளிபாத மலை செல்லும் வீதியின் இருபுறமும் உள்ள குப்பைத் தொட்டிகளிலும், சிவனொளிபாத மலைக்கு அண்டிய வன பகுதியிலும் மற்றும் வீதிகளிலுமம் இந்தக் கழிவுகள் அகற்றப்பட்டன.

மஸ்கெலியா பிரதேச சபையின் ரிகாடன் பகுதியில் அமைந்துள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்துக்கு இவை கொண்டு செல்லப்பட்டன என்று சிவராம் ராஜவீரன் தெரிவித்தார்.

பொது மக்கள் கொண்டுவரும் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் மக்காத திண்மக் கழிவுகளை சிவனொளிபாத மலைப் பகுதியில் உள்ள வன பகுதியில் விட்டு அல்லது எறிந்து செல்வதால் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றை அகற்றுவதற்கும், பாரிய அளவில் செலவு செய்ய வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆகையால் நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாத மலை உச்சி வரை வைக்கப்பட்டுள்ள இரும்புக் கூடைகளில் தனித் தனியாக மக்கும் மற்றும் மக்காத பொருள்களைத் தனித்தனியாக நிறுவப்பட்ட குப்பைத் தொட்டிகளில் விட்டு செல்லும் படி பிரதேச சபையின் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பெண்கள் சார்ந்து சட்டங்கள் உள்ள போதும் வன்முறை நடந்து கொண்டே இருக்கின்றது!

## யாழ். பல்கலை சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன்



(த.சுபேசன்)

பெண்கள் சார்ந்து எமது நாட்டில் ஏராளம் சட்டங்கள் எழுத்தில் உள்ள போதிலும் நாளுக்கு நாள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் புதிய வடிவங்களில் அரங்கேற்றப்படுகின்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த புதன் கிழமை சாவகச்சேரியில் இடம் பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பெண்களைப் பாதிக்கும் ஒவ்வொரு விடயம் சார்ந்தும் எமது நாட்டில் சட்டங்கள் உள்ளன.

பெண்களை அதிகம் பாதிக்கும் குடும்ப வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம், பெண்களை உடல், உள மற்றும் உணர்வு ரீதியான பாதிக்கும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம், பெண்களுடைய தொழில் உரிமைகளை பாதுகாக்கும் சட்டம், நிகழ் நிலை குற்றச் செயல்களில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் என ஒவ்வொரு விடயத்துக்கும் சட்டங்கள் உள்ளன.

கடந்த காலங்களில் வீடுகளில், தொழில் புரியும் இடங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நேரடியாக நிகழ்த்தப்பட்டன. ஆனால் இன்று இணைய வழிகளில் நிகழ் நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் புதிய வடிவங்களில் அரங்கேற்றப்படுகின்றன. பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் செயற்பாட்டில் உள்ள போதிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை.

சமூகமானது பெண் சார்ந்த தனது மனநிலையை எப்போது மாற்றிக் கொள்கின்றதோ அப்போதே பெண்கள் உரிமையைப் பெற முடியும்.

இந்த மாற்றம் ஒரே இரவில் நடந்து விடப் போவதில்லை. ஆனால் ஒவ்வொருவரும் பெண் சார்ந்த தனது எண்ணங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு நாளுக்கு நாள் எமது மனங்களில் ஏற்படுகின்ற மாற்றமே பெண் விடுதலையை – பெண் தலைவர்களை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும்.–என்றார்.

# அம்பாறை மாவட்டத்துக்கு திட்டமிடல் பணிப்பாளராக எம்.ஏ. முனாஸீர் நியமனம்

(சர்ஜுன் லாபீர்)

அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைச் சேர்ந்த எம்.ஏ முனாஸீர் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கிழக்கு மாகாண சபையில் மாகாண திட்டமிடல் செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக சுமார் 15 வருடங்களாக கடமையாற்றி பதவியுயர்வு பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேய விக்ரம முன்னிலையில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் ஆஸ்திரேலியாவின் உலக புகழ் பெற்ற மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி திட்டமிடலில் முதுமாணி பட்டம் பெற்றவர்.



# இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் கிழக்குக்கான விளையாட்டு விழா!



(பழுவூரான்)

இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்துக்கான விளையாட்டு விழா இந்த முறை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

பாரம்பரிய வாத்தியங்கள் முழங்க, அதிதிகள் வரவேற்கப்பட்டு, தேசியக் கொடி ஏற்றி தேசிய கீதம் மற்றும் இலங்கை வங்கியின் கீதம் என்பன இசைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் எச்.பிரியல்சில்வா தலைமையில் விளையாட்டு நிகழ்வு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனும், சிறப்பு அதிதிகளாக மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உஜித் என்.பி. லியனகே, கிழக்கு பல்கலைக்கழக பதில் உப வேந்தர் ரீ. பிரபாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்த்த இலங்கை வங்கியின் உத்தியோகத்தர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களின் விளையாட்டுத் திறமையை வெளிக் காட்டுவதற்கும் இந்த விளையாட்டு விழா களமாக அமைந்துள்ளது.

இதன் போது உத்தியோகத்தர்களிடையே கிரிக்கெட், கால்பந்து, கைப்பந்து, கூடைப்பந்தாட்டம், குண்டெறிதல், ஈட்டியெறிதல், ஓட்டப் போட்டிகள் எனப் பல போட்டிகள் இடம் பெற்றன.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.







# ஒஸ்மானியா கல்லூரியின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ் பரீட் இக்பால்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் மஹ்மூத் மண்டபத்தில் நாளை மறுதினம் (17) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி அதிபர் என்.எம்.சாபி தலைமையில் இடம்பெறவுள்ளது.

பெற்றோர்களைக் கலந்து கொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார். புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளது.



# கல்முனை மாநகர துறைசார் கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகள்

(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனை மாநகர சேவைகளுடன் தொடர்புடைய துறைசார் திணைக்களங்களின் ஒருங்கிணைப்பு மீளாய்வுக் கூட்டம் அண்மையில் கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த மீளாய்வுக் கூட்டத்தில் கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் முன்னெடுக்கப்படும் சேவைகளின் போது எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு, சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக அவற்றுக்கு தீர்வுகள் காண்பதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மக்களுக்கான சேவைகள் முன்னெடுக்கப்படுகின்ற போது பிரதேச செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள், சுகாதார வைத்திய பணிமனைகள், அதிகாரி மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து இவ்வாறு கலந்துரையாடப்பட்டு, தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ. எம். ஆஷிக் ஆகியோருடன் அரச நிறுவனங்களின் பிராந்திய அலுவலகங்களின் பிரதிநிதிகள், பொறியியலாளர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் பங்கேற்றனர்.



# சேனைக்குடியிருப்பு கணேசா வித்தியில் சேவை நலன் பாராட்டும் கௌரவிப்பும்

(எம்.எம்.றம்ஸீன்)

ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து மற்றும் சேனைக்குடியிருப்பு கணேசா வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டும் கௌரவிப்பு நிகழ்வு அதிபர் பீ. கமலத நிகழ்வில் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சஹிதுல் நஜீம் பிரதம விருந்தினராகவும், திட்டமிடல் பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி. வரணியா சாந்தரூபன், பாடசாலையின் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜீ..ஜோதிராஜா ஆகியோர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.







# 2024 மக்களவை தேர்தலுக்கான திகதி நாளை அறிவிக்கப்படும்

மக்களவைத் தேர்தல் அட்டவணை, ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், ஒடிசா, சிக்கிம் உள்ளிட்ட 4 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் அட்ட வணை ஆகியனவற்றை நாளை பிற் பகல் 3 மணிக்கு வெளியிடப்படும் என இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மேலும், இது தேர்தல் ஆணையத் தின் அதிகாரபூர்வ சமூக வலைதளங் களில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப் பட்டும் என்றும் ஆணையம் தெரிவித் துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையின் பதவிக்காலம் எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடைய உள்ளது. இதைத் தொடர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைத் தேர்தலை நடத்த தலைமை தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையை நாளை மாலை 3 மணிக்கு வெளியிட உள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

முன்னதாக தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் மாநில வாரி யான கள ஆய்வை தேர்தல் ஆணையம் மேற்கொண்டது. அண்மையில் ஜம்மு – காஷ்மீர் பாதுகாப்பு நிலவரம் மற்றும் தேர்தல் பணிக்கு தேவையான துணை இராணுவப் படைகள் குறித்து மத்திய அரசின் உயர் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணைய அதிகாரிகள் குழு ஆலோ சனை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து மார்ச் 11, 12, 13 ஆம் திகதிகளில் ஜம்மு – காஷ்மீர் சென்ற இக்குழுவினர், மக்களவைத் தேர்தலுடன் ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கும் தேர்தல் நடத்தலாமா என்பது குறித்து கள ஆய்வுகளை நடத்தினர்.

ஒவ்வொரு ஐந்த ஆண்டும் 543 தொகுதிகள் கொண்ட மக்களவைத் தேர்தல் இந்தியாவின் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவாகவே கொண் டாடப்படுகிறது. தேர்தல் திகதி அறிவிக் கப்பட்டால் அரசியல் களத்தில் அனல் பறக்கும் பிரச்சாரங்கள் தொடங்கிவிடும்.

மக்களவைத் தேர்தலை ஒட்டி இப்போதே தேசியக் கட்சிகள் தத்தம் வேட்பாளர்களை அறிவிக்கத் தொடங் கிவிட்டன. பா.ஜ.க. இதுவரை இரண்டு கட்டங்களாக 267 வேட்பாளர்களை அறிவித்துள்ளது. காங்கிரஸ், ஆம் ஆத்மி போன்ற தேசியக் கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்துள்ளன. மாநிலக் கட்சிகளும் கூட்டணி, வேட் பாளர் அறிவிப்பை தீவிரப்படுத்தியுள் என. மேற்குவங்கத்தில் மம்தா 42 தொகுதிகளிலும் தனித்துப் போட்டி என அறிவித்துள்ளார். இவ்வாறு தேர்தல் களம் நாளுக்கு நாள் பரபரப்பாகி வருகிறது.

இதனிடையெ, புதிய தேர்தல் ஆணையர்களாக சுக்வீர் சிங் சந்து, ஞானேஷ் குமார் ஆகியோர் நேற்று நியமனம் செய்யப்பட்டனர். இதனைய டுத்து இன்று அவர்கள் டில்லியில் உள்ள தேர்தல் ஆணையத்துக்கு வந்து பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர். அவர்களை தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜிவ் குமார் வரவேற்றார்.

அதேபோல், உச்ச நீதிமன்ற உத்தர வையடுத்து, எஸ்.பி.ஐ. வங்கி 2019 ஏப்ரல் முதல் 204 பெப்ரவரி 15 வரை யில் வழங்கப்பட்ட தேர்தல் பத்திர விவ ரங்களை கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்தது.

இந்த விவரங்களை மார்ச் 15 ஆம் திகதிக்குள் தேர்தல் ஆணையம் அதன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்று தேர்தல் ஆணையம் தேர்தல் பத்திர விவரங் களை அதன் தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

# தி.மு.க. வேட்பாளர் பட்டியல்: முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை



தி.மு.க. வேட்பாளர் பட்டியல், தி.மு.க. தேர்தல் அறிக்கை, காங்கிரஸ், ம.தி.மு.க. உடனான தொகுதி உடன்படிக்கை ஆகியவை குறித்து மூத்த நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை நடத்தினார்.

விரைவில் தி.மு.க. வேட்பாளர் பட்டியல், தேர்தல் அறிக்கை வெளியிட வேண்டியிருப்பதால், அது குறித்தும், காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகுதிகள் குறித்தும், அக்கட்சியினரின் கருத்துக்கள் தொடர்பாகவும் முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்தினார்.

# தமிழகத்தில் தி.மு.கவை வீழ்த்தி பா.ஜ.க. ஆட்சியை அமைப்போம்

## கன்னியாகுமரியில் பிரதமர் மோடி உரை



"தி.மு.கவை வீழ்த்தி பா.ஜ.க. ஆட்சியை அமைப்போம். தி.மு.க. - காங்கிரஸின் இண்டியா கூட்டணியால் தமிழகத்தில் எந்தவிதமான வளர்ச்சித் திட்டங்களையும் முன்னெடுக்கவே முடியாது."

- இவ்வாறு கன்னியாகுமரியில் பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி, தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"மக்களை கொள்ளையடிக்கவே எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்க நினைக்கிறார்கள். தி.மு.கவை வீழ்த்தி பா.ஜ.க ஆட்சியை அமைப்போம். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பா.ஜ.க. அலை வீசுகிறது.

திமுக-காங்கிரஸின் இண்டியா கூட்டணியால் தமிழகத்தில் எந்த விதமான வளர்ச்சித் திட்டங்களையும் முன்னெடுக்கவே முடியாது. அவர்களுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் மோசடியும், ஊழலும்தான் முதன்மையாக இருக்கும். அவர்களுடைய கொள்கையே அரசியலில் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்குதான். ஒரு பக்கம் பாரதிய ஜனதா கட்சியின் வளர்ச்சி திட்டங்கள், மற்றொரு பக்கம் இண்டியா கூட்டணியில் கோடிக்கணக்கான ஊழல்கள் இருக்கின்றன.

தி.மு.க. தமிழகத்தின், தமிழ் பண்பாட்டின் எதிரி. நமது கடந்த கால பெருமைகளையும், பாரம்பரியத்தையும் கண்மூடித்தனமாக எதிர்க்கின்ற எதிரி. உச்ச நீதிமன்றமே தமிழகத்தை கண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, நமது கலாச்சாரத்தின் மீதும், பண்பாட்டின் மீதும், பாரம்பரியத்தின் மீதும் எப்பொழுதும் தி.மு.க. வெறுப்பினைக் கக்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் பெருமையை .அடையாளத்தை பாதுகாக்க பா.ஜ.க. என்றும் முன்னணியில் இருக்கிறது. அவர்களின் தூற்றல்களையும். பேச்சுகளையும் நாங்கள் பொருட்படுத்துவதே கிடையாது." - என்றார்.

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு



"நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் வங்கக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், மீனவர் பிரச்சினைக்கு உடனடியாக நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்."

- இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் வங்கக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பாரம்பரியமாக மீன் பிடிக்க உரிமையுள்ள இடங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அத்துமீறி கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல் முடிவே இல்லாமல் தொடர்ந்து வருகிறது. கடந்த 10 ஆம் திகதி தான் வங்கக்கடலின் இரு பகுதிகளில் 22 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். அதனால், அந்தப் பகுதிகளில் ஏற்பட்ட பதட்டமும், கவலையும் விலகுவதற்கு முன்வாகவே மேலும் 15 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்திருப்பதை சகித்துக் கொள்ள முடியாது.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வது கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. தமிழக மீனவர்களை கைது செய்து சிறையில் அடைப்பது, அவர்களின் படகுகளை பறிமுதல் செய்து ஏலத்தில் விடுவது உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பறிப்பது தான் இலங்கை அரசின் நோக்கமாக உள்ளது. இந்த உண்மையை தெரிந்திருந்தும் அதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது நியாயமல்ல.

இந்தியா - இலங்கை அரசுகள் இணைந்து அமைத்துள்ள கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தைக் கூட்டி மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மீனவர்கள் கைது தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றமும் அதையே அறிவுரையாக வழங்கியிருக்கிறது. எனவே, இனியும் தாமதிக்காமல் கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தைக் கூட்டி மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்

## 20 பேர் பலி



மனிதாபிமான உதவிக்காக காத்திருந்த பாலஸ்தீனிய மக்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் 150 பேர் வரை காயமடைந்துள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், காசாவில் உள்ள சிறுவர்களை பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேசம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இந்தியாவில் குடியுரிமை திருத்தச் சட்டம் அமுல்; உன்னிப்பாக அவதானித்து வரும் அமெரிக்கா



சி.ஏ.ஏ. எனப்படும் குடியுரிமை திருத்தச் சட்டம் நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளதாக மத்திய அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா செயல்படுத்திய குடியுரிமை திருத்தச் சட்டத்தை (சிஏஏ) உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டம் (சி.ஏ.ஏ) மார்ச் 11 ஆம் திகதி அமலுக்கு வந்தது. இதன்படி பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தானில் மதரீதியாக துன்புறுத்தப்பட்டு கடந்த 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு இந்தியாவில் தஞ்சமடைந்த இந்து, சீக்கிய, சமண, புத்த, பார்சி, கிறிஸ்தவ சமூகங்களை சேர்ந்த சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கப்பட உள்ளது.

ஆனால், சி.ஏ.ஏ. சட்டத்தில் ஏன் முஸ்லிம்களுக்கு இடமில்லை என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பி வருகின்றன.

இந்த நிலையில், இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்த மதத்தினர், ஜெயின் மதத்தினர், பார்சிகள், கிறிஸ்தவர்களுக்குக் குடியுரிமை வழங்க வகுக்கப்பட்ட சி.ஏ.ஏ. சட்டத்தில் ஏன் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்பது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

“மார்ச் 11 ஆம் திகதி குடியுரிமை (திருத்தம்) சட்டத்தின் அறிவிப்பு குறித்த விவரங்களை இந்தியா வெளியிட்டது. இது எங்களுக்கு கவலையளிக்கிறது. இந்தச் சட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதை நாங்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். மத சுதந்திரத்துக்கான மரியாதை அளித்தல் மற்றும் அனைத்து சமூகங்களையும் சட்டத்தின் கீழ் சமமாக நடத்தப்படுவது தான் அடிப்படை ஜனநாயகக் கோட்பாடு.” என்று தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவில் இன்று ஜனாதிபதி தேர்தல்



ரஷ்யாவில் இன்று ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு ஆரம்பமாகியுள்ளது.

இந்த தேர்தல் வாக்கெடுப்பு, இன்று முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கிடையிலான போர் இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து வரும் நிலையில், இந்த இரண்டு ஆண்டுகளில் ரஷ்யாவில் இடம்பெறும் முதல் ஜனாதிபதி தேர்தல் இது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தற்போதைய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கு எதிராக லியோனிட் ஸ்லட்ஸ்கி, நிகோலாய் கரிடோனோவ் மற்றும் விளாடிஸ்லாவ் தவன்கோவ் ஆகியோர் இந்த



தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கவுள்ளனர்.

இன்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகும் தேர்தல் வாக்கெடுப்பானது இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக நாளை மற்றும் நாளை மறுதினம் தேர்தல் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

29 மாநிலங்களில் உள்ள மக்கள் இந்த தேர்தலில்



வாக்களிக்கவுள்ள நிலையில், வெளிநாடுகளில் வசிக்கும் ரஷ்யர்களுக்கு இணையவழி மூலம் அல்லது அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்களின் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஜனாதிபதி தேர்தலில் ஐந்தாவது தடவையாகவும் போட்டியிடும் விளாடிமீர் புடின், மீண்டும் வெற்றி பெறுவார் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், மக்கள் ஆணையுடன் ரஷ்யாவின் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் நபர் எதிர்வரும் மே மாதம் உத்தியோகபூர்வமாக பதவியேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைனின் பகுதிகளில் உள்ளவர்களும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரும்பு நுரையீரல் மனிதன் உயிரிழந்தார்

போலியோ நோயால் பாதிக்கப்பட்டு சொந்தமாக சுவாசிக்க முடியாமல், 70 ஆண்டுகளுக்கும் மேலாக உலோக உருளைக்குள் வாழ்ந்த அமெரிக்காவைச் சேர்ந்த போல் அலெக்சாண்டர் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

அலெக்சாண்டர் இறக்கும் போது அவருக்கு வயது 78.

அலெக்சாண்டர் 1952 இல் போலியோவால் பாதிக்கப்பட்டார். அவரால் சுவாசிக்க முடியாத நிலையில், மருத்துவர்கள் அவரை உலோக சிலிண்டர் அறையில் வைத்தனர்.

அப்போதும் போல் நீண்ட காலம் வாழ மாட்டார் என்று மருத்துவர்கள் கூறினர். போல் பல தசாப்தங்களாக மருத்துவர்களுக்கு சவால் விட்டார்.

ஒரு உலோக உருளை அறைக்கு அனுப்பப்பட்ட பிறகு, அலெக்சாண்டர் இறக்கும் வரை அந்த அறையில் இருந்தார்.

இதனால், போல் அலெக்சாண்டர் ‘இரும்பு நுரையீரலில்



மனிதன்’ என்றும் அழைக்கப்பட்டார். வாழ்நாள் முழுவதும் முகம் மட்டுமே தெரியும்படி வாழ்ந்த போல் அலெக்சாண்டர், சட்டம் படித்து பட்டம் பெற்றார்.

# மத வேறுபாடு இன்றி சி.ஏ.ஏ. சட்டத்தை அமல்படுத்த வேண்டும்: தலிபான் கருத்து

இந்தியாவில் மத வேறுபாடு இன்றி சி.ஏ.ஏ. சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று தலிபான் அரசியல் தலைமை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடத்தி வருகின்றனர். அவர்களின் அரசியல் தலைமை அலுவலகம் கட்டார் தலைநகர் டோஹாவில் செயல்படுகிறது. அந்த அலுவலக தலைவர் சுகைல் ஷாகீன் கருத்து தெரிவிக்கையில்,



“ஆப்கானிஸ்தானில் சீக்கியர்கள், இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் சுதந்திரமாக, பாதுகாப்பாக உள்ளனர். இந்தியாவில் சிறுபான்மையினராக உள்ள முஸ்லிம்கள் சம உரிமையுடன் நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். இந்தியாவில் புதிதாக அமல் செய்யப்பட்டிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை (சி.ஏ.ஏ.) மதவேறுபாடு இன்றி அமல்படுத்த வேண்டும். அந்த சட்டத்தில் முஸ்லிம்களையும் சேர்க்க வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

பக்கங்கள் 05

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 15/03/2024

## 'டிக்டொக்' குறித்து கனடாவும் கரிசனை

ஒன்றாரியோ,மார்ச்15
பிரபல சமூக ஊடகத் தளமான டிக்டொக்கினை பாதுகாப்பு மீளாய்வுக்கு உட்படுத்துமாறு கனடாவின் மத்திய அரசாங்கம் பணித்துள்ளது. C2

# இயற்கை எரிவாயுக் குழாய் செயற்றிட்டம்: பூர்வீகக் குடிகளையும் இணைத்து நடக்கும்

**பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்15**
**இயற்கை எரிவாயு குழாய் செயற்றிட்டத்தை பிரிட்டிஷ் கொலம்பியாவின் பூர்வீகக் குடிகளும், வெஸ்டர்ன் எல்.என்.ஜி நிறுவனமும் இணைந்து கொள்வனவு செய்துள்ளன.**



கல்கரியைத் தலைமையகமாகக் கொண்ட ரி.சி சக்தி குழுமத்தின் பிரின்ஸ் ரூபர்ட் கேஸ் பரிமாற்ற செயல்திட்டத்தை பிரிட்டிஷ் கொலம்பியாவின் வடமேல் கரையோரத்தில் அமைந்துள்ள நிசாகா பூர்வீகக் குடியினருடன் இணைந்து கொள்வனவு செய்யப் போவதாக, டெக்ஸாஸை தலைமையகமாகக் கொண்ட வெஸ்டர்ன் எல்.என்.ஜி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தக் கொள்வனவு தொடர்பான நிதி விவரங்களை இரு நிறுவனங்களும் இதுவரை வெளியிடவில்லை.

எவ்வாறாயினும், இந்த கொள்வனவு தொடர்பான தகவல்களை கல்கரி நிறுவனம் உறுதி செய்துள்ளது.



# ஏப்ரல் 8 சூரிய கிரகண நாளில் நயாகராவில் 1 மில்லியன் பேர்!

## கூடுவர் என்று நம்புகின்றார் மேயர்

ஒன்றாரியோ,மார்ச்15
சூரிய கிரகணம் இடம்பெறவுள்ள நாளில் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்த்துள்ளதாக நயாகரா நகர மேயர் தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சூரிய கிரகணத்தைப் பார்வையிடுவதற்கு நயாகரா நீர்வீழ்ச்சியே மிகச் சிறந்த இடம் என தேசிய புவியியல் திணைக்களம் அறிவித்துள்ளமையானது, சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகை தொடர்பான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக மேயர் ஜிம் டியோட்டி தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டில் நயாகரா நீர்வீழ்ச்சியின் குறுக்கே நிக் வலேன்டா நடந்த போது, வருகை தந்திருந்த 150,000 பேர் என்பதே மிக அதிக எண்ணிக்கையாக பதிவாகியுள்ளது.

சூரிய கிரகணத்தைப் பார்வையிட வருபவர்களின் எண்ணிக்கை இதனைவிட எட்டு அல்லது ஒன்பது மடங்கு பெரியதாக இருக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 8ஆம் திகதி நிகழவிருக்கும் இந்த சூரிய கிரகண நாளில் வானிலை எவ்வாறு அமையப் போகின்றது என்பதனைச் சார்ந்தே பயணிகளின் எண்ணிக்கை அமையும் எனவும் மேயர் டியோட்டி குறிப்பிட்டுள்ளார்.



# புதுப்பித்தல் சக்தி செயல்திட்டம்: அல்பேர்ட்டாவில் கடும் விமர்சனம்

அல்பேர்ட்டா,மார்ச்15

அல்பேர்ட்டா அரசாங்கத்தின் புதுப்பித்தல் சக்தி தொழில்துறை தொடர்பான செயல்திட்டம் அரச பயன்பாட்டுக் குழுவின் பரிந்துரைகளை கவனத்தில் கொள்ளவில்லை என விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நெறிமுறைகள், பயன்பாட்டுக் குழுவின் பரிந்துரைகளுடன் பொருந்தியதாக அது இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் சுற்றுச் சூழல் விமர்சகரான சாரா எல்மெல்கியே இதனைத் தெரிவித்துள்ளார்.

மார்ச் 13ஆம் திகதி அல்பேர்ட்டா பயன்பாட்டு ஆணைக்குழுவானது புதுப்பித்தல் சக்தி தொடர்பான அறிக்கையை வெளியிட்டிருந்தது.

# காத்திருப்புக்கான பட்டியல் நீடிப்பதே வீட்டுப் பராமரிப்பு சேவையில் சிக்கல்

## ஓய்வு பெற்றுச் செல்லும் அதிகாரி விளக்கம்

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்15

நீண்ட கால பராமரிப்பு சேவையில் காத்திருப்புக்கான பட்டியல் நீடிப்பதே வீட்டு ஆதரவு சேவைகளுக்கான கேள்வி அதிகரிப்பதற்கான காரணம் என பிரிட்டிஷ் கொலம்பியாவின் சிரேஷ்ட அதிகாரி இசபெல் மெக்கென்சி தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகைக்கு ஏற்ற வகையில் பராமரிப்பு சேவைகள் அதிகரிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட கால பராமரிப்பு இல்லங்களில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ள போதிலும், மேலதிக வீட்டுத் தொகுதிகளை அமைத்துள்ள போதிலும், நீண்ட கால பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ள போதிலும், அதிகரித்துள்ள கேள்வியை ஈடுசெய்வதற்கு இது போதுமானதாக இல்லை என அவர் கூறியுள்ளார்.



மார்ச் மாத இறுதியில் தமது பொறுப்புக்களில் இருந்து ஓய்வு பெறவுள்ள மெக்கன்சி வெளியிட்டுள்ள இறுதி அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ‘டிக்டொக்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பாதுகாப்பு மீளாய்வு கடந்த வருடம் செப்டம்பர் மாதம் மத்திய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இது குறித்த தகவல்கள் இப்போதே வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், கனடாவின் முதலீட்டுச் சட்டத்தின் கீழ் இரகசியமாக இது முன்னெடுக்கப்படுவதால் மேலதிக தகவல்களை வழங்குவதற்கு தொழில்துறை




அமைச்சின் பேச்சாளர் மறுத்துள்ளார். விசாரணையின் முடிவில் கனடாவின் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல் தரக்கூடிய அம்சங்கள் கண்டறியபட்டால், நடவடிக்கை எடுப்பதற்கு கனடா தயங்காது என அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவைச் சேர்ந்த பங்குதாரர் தமது பங்குகளை விற்காவிடின், அமெரிக்காவில் டிக்டொக்கினைத் தடை செய்யும் சட்டத்தை மார்ச் 13ஆம் திகதி அமெரிக்கா நிறைவேற்றியது.

இது குறித்து கருத்து தெரிவித்த பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ, கனடா உன்னிப்பாக விடயங்களை அவதானித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

குணம்ஸ் சுப்பர்மார்க்கட் Gsm GUNAAM SUPERMARKET

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## till March 17th










ஊர் ஆட்டிறைச்சி




Ceylon விளைமீன்

## Gunaam's super market இந்த வாரம் Super Special Deal

நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து விதமான மீன்களையும் மிக மிகக் குறைந்த விலையில் fresh ஆக பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| Ceylon விளைமீன் | - $7.99 lb | Ceylon சீலா Fish | - $8.99 lb |
| Ceylon ஓரா | - $6.99 lb | Ceylon கொடுவா Fish | - $8.99 lb |
| Ceylon கும்பிளா | - $6.99 lb | Ceylon முழு King Fish | - $9.99 lb |
| Ceylon திரளி | - $7.99 lb | Ceylon CRAB | - $10.99 lb |
| Ceylon காரல் | - $7.99 lb | ஊர் ஆட்டிறைச்சி | - $7.99 lb |
| சின்னற்றிப் பாரை | - $8.99 lb | காட்டுப் பன்றி | - $4.99 lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998



# ஹைட்டியில் உள்ள தூதரகத்திலிருந்து அதிகாரிகளை விலக்குகின்றது கனடா

ஒன்ராரியோ,மார்ச்15

ஹைட்டியில் உள்ள கனேடிய தூதரகத்தின் அதிகாரிகளின் எண்ணிக்கையை கனடா குறைத்துள்ளது.

ஹைட்டியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தொடர்ந்து பல நாடுகளும் அங்கு தமது தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைத்து வருகின்றன.

இதனடிப்படையில், கனேடியத் தூதரகத்தில் இருந்த பல அதிகாரிகளை ஹெலிக்கொப்டர் மூலம் மார்ச் 14ஆம் திகதியன்று கனடாவுக்கு வரவழைத்தது, கனேடிய அரசாங்கம். கடந்த வாரம் முதலே, ஹைட்டியில் கனேடியத் தூதரகத்தை மூடிய கனேடிய அரசாங்கம், ஊழியர்களை வீட்டில் இருந்தே வேலை செய்வதற்கு பணித்திருந்தது.



# ஸ்கார்பரோவில் பெண் மரணம் கூடவிருந்த ஆண் ஒருவர் கைது

ஒன்ராரியோ,மார்ச்15

ஸ்கார்பரோவில் வீடொன்றில் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 40 வயதான ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்கார்பரோ கொல்ப் கிளப் ரோட் மற்றும் கிங்ஸ்டன் ரோட் அருகில் அமைந்துள்ள வீட்டுத் தொகுதியில் இருந்து மார்ச் 14ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் பொலிஸாருக்கு இந்த சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாற்பது வயதான நபர் ஒருவர் பொலிஸாரை தொலைபேசியில் அழைத்து, தமது கையால் பெண்ணொருவருக்கு தீங்கு ஏற்பட்டுவிட்டது எனத் தெரிவித்துள்ளார். பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த போது கடுங்காயங்களுடன் இருந்த பெண்மணி, பின்னர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் அறிவித்த நபரை சம்பவ இடத்திலேயே பொலிஸார் கைது செய்துள்ளனர்.




# ஒட்டாவாவில் 6 பேர் கொலை; சந்தேகநபர் தடுப்புக்கவலில்!

ஒன்ராரியோ,மார்ச்15

ஒட்டாவாவில் குடும்பத்தினரைக் கொலை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என சந்தேகநபரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த ஆறு பேரின் கொலை, மற்றுமொருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 19 வயதான இலங்கையைச் சேர்ந்த சந்தேகநபரான பெப்ரியோ டி சொய்சா மீது படுகொலைக் குற்றச்சாட்டு மற்றும் கொலை முயற்சி குற்றச்சாட்டு என்பன சுமத்தப்பட்டுள்ளன.

தொலைபேசி ஊடாக இடம்பெற்ற நீதிமன்றச் செயற்பாடுகளைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த சந்தேகநபரின் சட்டத்தரணி, சந்தேகநபர் நலமாக இருப்பதாகவும், அவர் பாதுகாப்பு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார் எனவும் குறிப்பிட்டார்.

உயிரிழந்தவர்களில் தாய் மற்றும் நான்கு பிள்ளைகளின் இறுதிக் கிரியைகள் வார இறுதியில் ஒட்டாவாவில் இடம்பெறவுள்ளன.

# நீண்ட கால நாடாளுமன்ற உறுப்பினரான எட் பாஸ்ட் இனிப் போட்டியிடமாட்டாராம்

ஒன்ராரியோ,மார்ச்15

கன்சர்வேட்டிவ் கட்சியின் நீண்ட கால நாடாளுமன்ற உறுப்பினரான எட் பாஸ்ட் அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின், அபொட்ஸ்போட் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாஸ்ட், சுமார் 18 வருடங்களுக்கும் அதிக காலம் இருக்கின்றார்.

முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பரின் காலப்பகுதியில் சர்வதேச வர்த்தக அமைச்சராகவும் இவர் இருந்துள்ளார்.

தற்போது, தொழில், சுற்றுச்சூழல் மற்றும் நிதி தொடர்பான எதிர்க்கட்சியின் முக்கிய விமர்சகராகவும் இருக்கின்றார்.

அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கு தமது தொகுதியில் இருந்து பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு கட்சியிடம் அவர் கோரியுள்ளார்.

